**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 10

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Ezhumalai

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 16th day of September, 2022.

**Date: 16.09.2022,      S.C.No. 71/2020   PW : 10,   Tr.. Ezhumalai**

**முதல் விசாரணை...**

நான் பள்ளிப்பட்டு தாலுக்கா அலுவலகத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். தனசேகர் என்பவரை எனக்கு தெரியும். அவர் என் பெரியப்பாவின் பேரன் ஆவார். அவர் வனத்துறையில் தற்காலிக டிரைவராக பணிபுரிந்துவந்தார். 01.03.2018 அன்று நான் என்னுடைய வேலையை முடித்துவிட்டு இரவு சுமார் 11.30 மணிக்கு நான் என் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன். அப்போது தனசேகர் ஒரு ஸ்கூட்டியில் சாய்ந்துகொண்டு தாங்கல் காலணி கூட்ரோடு பஸ் ஸ்டாப்பில் பேசிக்கொண்டிருந்தார். இந்நேரத்தில் இங்கே நின்று ஏன் பேசிக்கொண்டிருக்கிறார் என்ன வேலை என்று கேட்டேன். போன் வந்தது அதனால் பேசுகிறேன் என்று சொன்னார். வீட்டிற்கு போ என்று சொல்லிவிட்டு நான் கிளம்பி சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அவர் பேசிக்கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 60 அடி தொலைவில் 5, 6 பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் யார் என்று கேட்கவில்லை. எதிரிகளில் யாராவது அங்கு பேசி கொண்டிருந்தவர்களில் இருந்தார்களா என்று கேட்டால் நான் தூரத்தில் இருந்ததால் தெரியவில்லை. 2 நாள் கழித்து தனசேகரின் தந்தை தனசேகரை காணவில்லை என்று என்னிடம் சொன்னார். நான் அவரிடம் தனசேகரை பேருந்து நிறுத்ததில் பார்த்த விவரத்தை சொன்னேன். அவர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றார். சுமார் 1 வாரத்தில் வாணிவிலாசபுரம் காட்டில் ஒரு பிரேதம் இருப்பதாக சொன்னார்கள். நானும் ஊர்மக்களுடன் சென்று பிரேதம் இருந்த

இடத்தை பார்த்தேன்.அந்த பிரேதத்தில் தனசேகரை நான் பேருந்து நிறுத்ததில் பார்த்தபோது அவர் அணிந்திருந்து கருநீல டி-சர்டும், கருப்பு லோயரும் இருந்தது. அந்த பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். அவர் எப்படி இறந்தார் என்று கேட்டால் அவரை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். யாரோ 4, 5 பேர் சேர்ந்து வெட்டியதாக சொன்னார்கள். யார் என்று தெரியாது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

பேருந்து நிறுத்தத்தில் அவர் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் என்னிடம் அங்கு பேசிக் கொண்டிருந்த நபர்களில் அவருக்கு தெரிந்த முரளி இருப்பதாக சொன்னார். தனசேகரும் முரளியும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று விவரத்தை தனசேகரின் தந்தையிடம் நான் சொன்னேன். முரளியும் அவருடன் சேர்ந்த நபர்களும் தான் தனசேரை கொன்றுவிட்டார்கள் என்று தனசேரின் தந்தை பதற்றமாக சொன்னார். அந்த நபர்கள் செம்மரத்தை வெட்ட தனசேகரிடம் கேட்டதாகவும் அதனால் தகராறு ஏற்பட்டது என்றும் அதனால் தனசேகரை அவர்கள் கொன்றுவிட்டதாகவும், தனசேகரின் தந்தை என்னிடம் சொன்னார். அவர்கள் செம்மரத்தை வெட்ட தனசேகரிடம் கேட்டதாகவும் தனசேகர் வனத்துறை அலுவலரிடம் சொல்லிவிடுவேன் என்று சொல்லி வீடியோ

எடுத்ததாகவும் தனசேகரின் தந்தை என்னிடம் சொன்னார். தனசேகரை உயிருடன் விட்டால் அவர் வெளியே சொல்லிவிடுவார் என்றும் அவரை கொன்றுவிட்டார்கள் என்று தனசேகரின் தந்தை என்னிடம் சொன்னார். நான் தற்போது எதிரிக ளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை...</u>**

நான் நிரந்தர டிரைவர் தான். என்னுடைய வேலை நேரம் என்னவென்று கேட்டால் எனக்கு 24 மணிநேரம் வேலை நேரம் ஆகும். தனசேகரை நான் பார்த்தபோது இரவு சுமார் 11.30 மணியிருக்கும். அவரை தாங்கல் காலணி பஸ் நிறுத்தத்தில் வைத்து ஸ்கூட்டரில் வைத்து பேசிக்கொண்டிருந்தார். இரவு 11.00 மணிக்கு ஜீப்பை அலுவலகத்தில் விட்டுவிட்டு நான் பைக்கில் வந்தேன். பள்ளிப்பட்டு தாலுக்கா அலுவலத்திற்கும் நான் தனசேகரை பார்த்த இடத்திற்கும் சுமார் 8 கிமீ தூரம் இருக்கும். நான் தாங்கல் காலணியில் குடியிருக்கிறேன். என் வீடு தாங்கல் காணியில் இருந்து 3/4 கி.மீ தூரத்தில் இருக்கிறது. நான் சொல்வது போல் தனசேகரை அந்த பேருந்து நிறுத்ததில் பார்க்கவில்லை என்றும், அவர் என் உறவினர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 11

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Tr. Chakkravarthy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 16th day of September, 2022.

**<u>Date: 16.09.2022, S.C.No. 71/2020 PW : 11, Tr. Chakkravarthy</u>**

**<u>முதல் விசாரணை...</u>**

நான் தாங்கல் காலணியில் குடியிருந்து வருகிறேன். வெங்கடேசன் என்பவரை எனக்கு தெரியும். அவர் என் அண்ணன் மகன் ஆவார். நானும், வெங்கடேசனும் ஊருக்கு சென்றோம். பொதட்டூர்பேட்டை காவல் நிலையம் வழியாக சென்றோம். சுமார் 2, 3 வருடத்திற்கு முன்னர் போலீசார் எங்களை அழைத்தார்கள். தனசேகர் என்பவரை கொலை செய்தவர்களை விசாரிக்க இருக்கிறோம் என்றும் அதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்றும் பொதட்டூர்ப்பேட்டை போலீசார் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 2, 3, 5 மற்றும் 6 எதிரிகள் ஆவார்கள். (சாட்சி கூண்டிலிருந்து இறங்கி சென்று எதிரிகள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு சென்று அவர்களை அடையாளம் காட்டினார்). மேற்கண்ட நபர்கள் செம்மரத்தை வெட்ட சென்றபோது தனசேகர் என்பவர் மடக்கியதாகவும், வனத்துறையிருக்கும், போலீஸாருக்கு தகவல் சொன்னதாகவும், கேமராவில் படம் எடுத்ததாகவும், தனசேகர் என்பவரை வெட்டிவிட்டதாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள். எந்த இடத்தில் வெட்டினீர்கள் என்று கேட்டபோது குமாரராஜபேட்டை ஓட்டேரி என்ற இடத்தை சொன்னார்கள். அந்த இடத்திற்கு அவர்கள் போலீஸாரை அழைத்து சென்றார்கள். நாங்களும் சென்றோம். இந்த இடத்தில் தான் வெட்டினோம் என்று அவர்கள் காட்டினார்கள். அந்த இடத்தில் இரத்தம் இருந்தது, 2 செருப்பு இருந்தது. போலீஸார் அந்த இரத்தம் படிந்த மண்ணையும் செருப்பையும், கைப்பற்றினார்கள். சம்பவம் நடந்த

இடத்தை பார்த்து போலீசார் படம் வரைந்தார்கள். எதிரிகள் சொன்னபடி ஒரு கத்தி, 2 கோடாரி, 1 வாள் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் இருந்த புதரில் இருந்து போலீசார் கைப்பற்றினார்கள். போலீசார் அவரை எந்த இடத்தில் எடுத்து போட்டீர்கள் என்று கேட்டார்கள். வாணிவிலாசபுரம் மலையோரத்தில் பிரேதத்தை போட்டுவிட்டாத சொன்னார்கள். தனசேகரின் வெள்ளை நிற ஸ்கூட்டியில் தனசேகரை எடுத்து சென்று வாணிவிலாசபுரம் மலையோரத்தில் போட்டுவிட்டு ஸ்கூட்டியை எடுத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். போலீசார் ஸ்கூட்டி எங்கே என்று கேட்டார்கள். அவர்கள் அரக்கோணம் பக்கத்தில் ஆஞ்சநேயர் கோவிலுக்கு அருகில் புதரில் போட்டிருப்பதாக சொன்னார்கள். அவர்கள் அந்த இடத்திற்கு போலீசாரை அழைத்து சென்று காட்டினார்கள். போலீஸார் அந்த ஸ்கூட்டியை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் 3ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என் கையொப்பம் தான். அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.6. என்னுடன் வெங்கடேசன் என்பவரும் கையொப்பம் போட்டார். அந்த கையொப்பம் அத.சா.ஆ.7, என்னிடம் காட்டப்படும் ராஜேந்திரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அந்த கையொப்பம் அத.சா.ஆ.8, அதில் உள்ள வெங்கடேசன் என்பவர் கையொப்பம் அ.த.சா.ஆ.9, என்னிடம் காட்டப்படும் மணி என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் ஆகும். அது அ.த.சா.ஆ.10, அதில்

உள்ள வெங்கடேசன் என்பவரை கையொப்பம் அ.த.சா.ஆ11. என்னிடம் காட்டப்படும் மாணிக்கம் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அது அத.சா.ஆ.12, வெங்கடேசன் என்பவர் கையொப்பம் அ.த.சா.ஆ13. என்னிடம் காட்டப்படும் கோபால் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அது அத.சா.ஆ.14, வெங்கடேசன் என்பவர் கையொப்பம் அ.த.சா.ஆ15. என்னிடம் காட்டப்படும் இரத்தம் படிந்த மண் மற்றும் செருப்பை கைபற்றியதற்கு தயார் செய்யப்பட்ட மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அது அத.சா.ஆ. 16. அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.17. இருசக்கர மோட்டார் வாகனத்தை கைப்பற்றியதற்காக தயார் செய்யபட்ட மகஜரின் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அது. அ.த.சாஆ.18, அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.19. நோக்கியா செல்போன் கைப்பறியதற்கு தயார் செய்யப்பட்ட என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் அத.சா.ஆ.20 அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.21, கோடாரியை கைப்பறியதற்கு தயார் செய்யப்பட்ட என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் அத.சா.ஆ.22 அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.23, இரும்பு வாள் கைப்பறியதற்கு தயார் செய்யப்பட்ட என்னிடம் காட்டப்படும்

மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் அத.சா.ஆ.24 அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.25, மற்றும் ஒரு கோடாரி கைப்பற்றியதற்கு தயார் செய்யப்பட்ட என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் அத.சா.ஆ.26 அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.27, வெட்டுக் கத்தி கைப்பற்றியதற்கு தயார் செய்யப்பட்ட என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் அத.சா.ஆ.28 அதில் உள்ள வெங்கடேசன் என்பவரது கையொப்பம் அ.த.சா.ஆ.29, எங்கள் முன்னிலையில் செருப்பு கைப்பற்றியதற்கு தயார் செய்யப்பட்ட என்னிடம் காட்டப்படுவது தான். அது சா.பொ.1 ஆகும். 2 கோடாரிகள் சாபொ2 மற்றும் சாபொ3 ஆகும். நீல நிற கைப்பிடியுள்ள வாள் சாபொ4. மஞ்சள் நிற கைப்பிடியுள்ள வாள் சாபொ5. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான் அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.30, அதில் உள்ள வெங்கடேசன் என்பரது கையொப்பம் அ.த.சா.ஆ.31, போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை...</u>

இதற்கு முன்னர் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததில்லை. நான் பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்திற்கு போகும்போது பகல் சுமார் 12.00 மணியிருக்கும். தனசேகர் என் உடன்பிறந்த அண்ணன் மகன். என் முன்பு விசாரித்த நபர்களை போலீசார் எப்போது கைது செய்தார்கள் என்று

எனக்கு தெரியாது. ஆய்வாளர் உட்கார்ந்திருக்கும் அறையில்வைத்து விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் சுமார் 5, 6 கையெழுத்து போட்டிருப்பேன். எனக்கு ஞாபகமில்லை. காவல் நிலையத்திற்கு வெளியே கூட்டம் இருந்தது. சுமார் 10, 15 பேர் இருந்தார்கள். காவல் நிலையத்தில் உள்ளவர்கள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால் என்னை அழைத்தார்கள். நான் பயிர் கூலி வேலை செய்கிறேன். காலை 8.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மதியும் 1.00 மணிக்கு வருவேன். நான் இருசக்கர வாகனத்தில் வெங்கடேசனுடன் சென்றேன். நானும் அவரும் ஒரே வாகனத்தில் தான் சென்றோம். காவல் நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருந்தோம். என்னுடைய மகள் வீட்டிற்கு 2.30 மணிக்கு சென்றேன். அதன்பின்பு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை. அந்த நபர்களிடமிருந்து தான் வாக்குமூலம் வாங்கினார்கள். வீட்டிற்கு வந்த பின்னர் நான் போலீசாரை பார்க்கவில்லை. அதற்கு பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் கேட்டால் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். எதிரிகள் சொல்ல சொல்ல எழுதிய பின்னர் நான் அதில் கையொப்பம் போட்டேன். கொஞ்ச பேப்பரில் தட்டச்சு செய்தார்கள் அதிலும் கையொப்பம் போட்டேன். வேறு கையொப்பங்களை போடவில்லை. நான் சொன்ன நேரத்தில் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றும் எதிரிகள் என் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் இறந்தவர் என்

உறவினர் என்பதால் நான் காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டுவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களை நான் பார்க்கவில்லை என்றும் போலீசார் சொல்லி கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. யாரும் எனக்கு சொல்லி கொடுக்கவில்லை. எனக்கு வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.